# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

TNBEF- AIUBEA உடன் இணைக்கப்பட்டது

சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை -600 001

தொலை பேசி : 044-45000032 மின் அஞ்சல் : ubeutn@gmail.com


சுற்றறிக்கை எண்:120:2023 நாள்: 13.07.2023

அன்பார்ந்த தோழர்களே,

## தொழிற்சங்கப் பயிற்சி

ஊழியர்களின் நிலையான, பாதுகாப்பான வாழ்விற்கும், அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும், தொழிற்சங்கங்கள் அவசியம் என்பதை நமது தோழர்கள் நன்கு அறிவார்கள். வங்கித்துறையில், தொழிற்சங்கங்களின் பணி தன்னிகரற்றது. அத்தகைய தொழிற்சங்கங்களின் பணி தொடர்ந்திட, கடமை உணர்வு கொண்ட தலைவர்கள் கண்டறியப்படவும், அவர்களுக்கு தேவையான பயிற்சிகள் வழங்கிடவும் தொடர் முயற்சி தேவை.

கடந்த பல ஆண்டுகளாக, நமது சங்கம் முயற்சி மேற்கொண்டு பல தலைவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்கி, பல முன்னணித் தோழர்களை உருவாக்கியுள்ளது. ஆந்திரா வங்கி ஊழியர் சங்கமும், கார்ப்பொரேஷன் வங்கி ஊழியர் சங்கமும், யூனியன் வங்கி ஊழியர் சங்கத்துடன் இணைந்தபின் இந்த முயற்சி மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது.

தொழிற்சங்கப்பணியில் ஆர்வமுள்ள தோழர்களுக்கு தேவையான பயிற்சிகள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சிப் பட்டறைகள், விருப்பம் தெரிவிக்கும் தோழர்களின் எண்ணிக்கை, அவர்கள் பணியாற்றும் இடத்தைப் பொருத்து தேர்வு செய்யப்படும்.

தங்களையும், தங்கள் குடும்பத்தையும் தாண்டி, சமூக நோக்கத்துடன், தங்களது நேரத்தையும், ஆற்றலையும், தொழிற்சங்கத்திற்கு வழங்க விருப்பமுள்ள தோழர்கள் இந்தச் சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தை பூர்த்தி செய்து சங்க அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தோழமை வாழ்த்துகளுடன்,

(அ.சிதம்பரம்)
பொதுச் செயலாளர்

To Date:___________

The General Secretary
Union Bank Employees' Union (Tamilnadu)
Singapore Plaza, 164, Linghi Chetty Street,
Chennai - 600 001

Dear Comrade,

I wish to nominate myself for the Trade Union Workshop conducted by the Union and my particulars (in capital letters) are as under:

| | | |
|---|---|---|
| 1. | Name | |
| 2. | Designation | |
| 3. | Branch | |
| 4. | Date of Birth | |
| 5. | Date of Joining the Bank | |
| 6. | Date of joining the present cadre | |
| 7. | Mobile Number | |
| 8. | E-Mail ID | |
| 9. | Educational Qualification | |
| 10. | JAIIB/CAIIB completion | |
| 11. | Hobbies | |
| 12. | Social activities you have involved | |
| 13. | School/College activities you have involved | |
| 14. | Political ideology subscribed by you | Left ☐ Right ☐ Centre ☐ None ☐ |
| 15. | Your areas of interest | |
| 16. | The goal you wish to achieve | |
| 17. | Do you feel that there is any possibility to change this society | |

Signature ______________________